சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 141/2017

| | | |
|---|---|---|
| பிரதிவாதிகள் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | விசாலாட்சி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாள் வியாழக்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

வழக்கில் 1ம் பிரதிவாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். ஆலத்தூர் கிராமம் பட்டா எண். 76 மனைவரி தோரய பட்டா பி.சா.ஆ.1, மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய விண்ணப்பம் பி.சா.ஆ.2, 06.03.2006 தேதிய கிரய ஆவணத்தின் சான்று நகல் பி.சா.ஆ.3.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

குள்ளியம்மாள் என்னுடைய தாயார். வாதி என்னுடைய அண்ணி. எனக்கு பூர்வீகம் ஆலத்தூர் கிராமம். 2006 ஆம் ஆண்டு என் தாயாரிடமிருந்து நான் கிரயம் வாங்கினேன். வாதி செய்யாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.98/2006 வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் எனக்கு அழைப்பாணை வருவதற்கு முன்பாகவே நான் கிரயம் வாங்கிவிட்டேன். நான் கிரயம் வாங்கி 15 ஆண்டுகள்

அனுபவித்து வந்தேன். 30 ஆண்டுகளாக வாதி சென்னையில் குடியிருந்து வருகிறார். வாதி என் தாயாருடன் இல்லை. நான் 15 ஆண்டுகள் சொத்தை அனுபவித்து வந்து 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டேன். தாவா சொத்திற்கும் எல்லம்மாளுக்கும் சம்பந்தம் இல்லை. நான் 2ம் பிரதிவாதியிடம் கிரய மறுபயன் வாங்கிக்கொண்டு தான் கிரயம் கொடுத்தேன். நான் முறையான ஆவணங்களின் அடிப்படையில் தான் கிரயம் கொடுத்தேன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.